திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம் புதுப்பட்டினம் ஊராட்சி தனி அலுவலர் அவர்களின் செயல்முறை முன்னிலை திரு.மா.சே. ஜெரோம் ஆனந்த்

ந.க.எண்.621/2018/ஆ1

நாள். 08 .05.2018

பொருள்.. அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017 -- காஞ்சிபுரம் மாவட்டம் - திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம் புதுப்பட்டினம் ஊராட்சி மற்றும் புதுப்பட்டினம் கிராமம் - சர்வே எண்.248/1A1A,1A1C,1A1D,1A2,3B2 ல் பரப்பு 5.66 ஏக்கர் அல்லது 246549 சதுரஅடி மற்றும் 22904.96சதுர மீட்டர் இடத்தில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு உறுப்பினர் செயலர் (பொ) மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் மாமல்லபுரம் மண்டலம் கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கபட்டுள்ளது - அரசு மற்றும் ஊராட்சிக்கு செலுத்த வேண்டிய தொகை செலுத்தப்பட்டுவிட்டது - வரன்முறைப்படுத்தி ஒப்புதல் அளித்து - உத்தரவிடுதல்.

பார்வை.. 11.அரசாணை (நிலை )எண் 78 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை , ந.வ.4(3) நாள் 04.05.2017.

2.அரசாணை (நிலை )எண்.172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை , ந.வ.4(3) நாள் 13.10.2017.

3.நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் வழிகாட்டி நெறிமுறை ந.க.எண். 13193/2017/LA2 நாள்.30.10.2017, 07.11.2017.

4.Mr.Bilal Hussain என்பவரின் மனு நாள்.20.11.2017

5.உறுப்பினர் செயலர் (பொ) மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் கடித ந.க.எண்.1415/2017/மாஉதிகு நாள் 12.02.2018

5.புதுப்பட்டினம் ஊராட்சி மன்ற தீர்மான எண்.22நாள்.09.05.2018

----------------

<u>உத்தரவு</u>

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம்ஊராட்சி ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சி மற்றும் புதுப்பட்டினம் கிராமம் - சர்வே எண்.248/1A1A,1A1C,1A1D,1A2,3B2 ல் பரப்பு 5.66 ஏக்கர் அல்லது 246549 சதுரஅடி மற்றும் 22904.96சதுர மீட்டர் இடத்தில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு உறுப்பினர் செயலர் (பொ) மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் மாமல்லபுரம் மண்டலம் கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கபட்டுள்ளது. ம.வ/மாஉதிகு எண் 11(R)/2018 என எண்ணிடப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| மனையின் மொத்த பரப்பு | 5.66 ஏக்கர் (அ) 22904.96ச.மீ (அ) 246549ச.அடி |
| விற்கப்படாத மனைகள் | மொத்தம் 81 மனைகள் (6,6A,8-49,51-88) |
| விற்கப்பட்ட மனை எண் | மொத்தம் 7 மனைகள் (1-5,7 &50) |

மொத்த மனைப்பிரிவில் 10.18% OSR பூங்கா1,2மற்றும்3 (3966+3469+6288=13723ச.அடி) மற்றும் மனைப்பிரிவு சாலை (54198ச.அடி) பிரிவிற்கு 67921ச.அடி புதுப்பட்டினம் ஊராட்சிக்கு தானமாக வழங்கபட்டுள்ளது. தானபத்திர எண்.1788/2018 திருக்கழுக்குன்றம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டு தானபத்திரம் பெறப்பட்டுள்ளது. மனைப்பிரிவில் உள்ள பூங்கா மற்றும் சாலை நீட்டிப்பு பரப்பு 67921 ச.அடி உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

9

1.வரன்முறை கட்டணம் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.30/-

(விற்கப்படாத மனை எண்கள்.81) ரூ.30X12519ச.மீட்டர் =375570/-

ரூபாய் 375570/- (ரூபாய் மூன்று இலட்சத்து எழுபத்து ஐந்தாயிரத்து ஐநூற்று எழுபது மட்டும்) கீழ்காணும் அரசு தலைப்பில் கருவூலத்தில் செலுத்தி அதன் செலுத்து சீட்டு நகல் பெறப்பட்டது. (செலான் எண்.36,37,38,39,40,41,42,43,44/25.05.2018)

0217 Urrban development -60 other Urban Development Schemes –
800 other receipts A T Receipts under Regularisation Charges of
Unapproved layout and Plots –DTCP
(DPC:0217 60 800 AT 0007)

2.வளர்ச்சி கட்டணம் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.25/-

(விற்கப்படாத மனை எண்கள்.81) ரூ.25X12519ச.மீட்டர் = 312975/-

ரூபாய் 312975/- (ரூபாய் மூன்று இலட்சத்து பன்னிரண்டாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்து ஐந்து மட்டும்) புதுப்பட்டினம் ஊராட்சி கணக்கு எண்.1ற்கு வங்கி வரைவோலை எண்.627526 நாள்.28.05.2018 ஆக **"Special Officer Pudupattinam Panchayat"** என்ற பெயரில் வழங்கப்பட்டுள்ளது. (பலவகை ரசீது எண்.1494 / 28.05.2018).

மேற்காணும் கட்டணங்களை செலுத்தபட்டதை தொடர்ந்து விற்கபடாத மனை எண்கள்.81 (6,6A,8-49,51-88) (134752ச.அடி) அபிவிருத்தி செய்யவோ அல்லது மறு விற்பனை செய்யவோ அனுமதித்து வரண்முறைபடுத்தி உத்தரவிடப்படுகிறது.

விற்பனை செய்த மனைகளுக்கு (1-5,7&50) (43876ச.அடி) அபிவிருத்தி மேற்கொள்ளும் போது ஒரு சதுர மீட்டருக்கு ரூ.25/- வீதம் வளர்ச்சி கட்டணம் ஊராட்சிக்கும் ஒரு சதுர மீட்டர் ஒன்றுக்கு ரூ.30/- வீதம் வரண்முறை கட்டணம் அரசுக்கும் செலுத்தப்பட்ட பின்னரே வரண்முறைபடுத்தப்படும்.

இந்த வரண்முறையானது காலி மனைக்கு மட்டுமே அளிக்கப்பட்டுள்ளது. இதில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களுக்கு அல்லல.

தனி அலுவலர்
புதுப்பட்டினம் ஊராட்சி
திருக்கழுக்குன்றம்.

பெறுநர்

திரு. Bilal Hussain
ECR சாலை
புதுப்பட்டினம்

நகல் - உறுப்பினர் செயலர் (பொ) மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் மாமல்லபுரம்
நகல் - ஊராட்சி செயலர் ,புதுப்பட்டினம் ஊராட்சி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம்.

**உறுப்பினர் செயலர் (பொ) மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம், மாமல்லபுரம் அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை : திரு.வி.எம்.ராஜேந்திரன் பி.இ.,**

ந.க.எண். 1415 / 2017 மாஉ திகு.

நாள் : 12 .02 .2018.

**பொருள்:** அனுமதியற்ற மனைப்பிரிவு முறைப்படுத்துதல் திட்டம் - 2017 - மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழும பகுதி - காஞ்சிபுரம் மாவட்டம் - திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், **புதுப்பட்டினம் ஊராட்சி மற்றும் புதுப்பட்டினம் கிராமம்** சர்வே எண். 248/1A1A,1A1C,1A1D, 1A2, 3B2 -ல் 5.66 ஏக்கர் (**246549.00 சதுர அடி**) பரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு முறைப்படுத்துதல் திட்டத்தின் கீழ் ஒப்புதல் வழங்க கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் வழங்குதல் - சம்பந்தமாக.

**பார்வை:**
1. அரசாணை (நிலை) எண்.78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ந.வ.4(3) நாள். 04.05.2017.
2. அரசாணை (நிலை) எண்.172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ந.வ.4(3) நாள். 13.10.2017.
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் வழிகாட்டி நெறிமுறை ந.க.எண்.13193/2017/LA2. நாள். 30.10.217 மற்றும் 07.11.2017.
4. மனுதாரர் **Mr.BILAL HUSSAIN** அவர்களின் கடிதம் மற்றும் இணைப்புகள் நாள்.20.11.2017.

****

**உத்தரவு**

பார்வை 1 மற்றும் பார்வை 2-ல் கண்ட அரசாணையின் படியும் பார்வை 3-ல் கண்ட வழிகாட்டி நெறிமுறையின்படி பார்வை 4-ல் கண்ட மனுதாரரின் கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

காஞ்சிபுரம் மாவட்டம், **திருக்கழுக்குன்றம்** ஊராட்சி ஒன்றியம், **புதுப்பட்டினம் ஊராட்சி மற்றும் புதுப்பட்டினம் கிராமம்** சர்வே எண். 248/1A1A ,1A1C, 1A1D, 1A2, 3B2 -ல் 5.66 ஏக்கர் (**246549.00 சதுர அடி**) பரப்பில் மனைப்பிரிவிற்கு முறைப்படுத்துதல் திட்டத்தின் கீழ் ஒப்புதல் வழங்க அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் **(in - principle approval)** வழங்கப்படுகிறது.

மேற்படி அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவுக்கு **மவ/மாஉதிகு எண். 11 (R) 2018** என எண்ணிடப்பட்டு கீழ்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டுகிறது.

| | |
|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பு | -- 5.66 ஏக்கர் (**246549.00 சதுர அடி**) |
| மொத்த மனைகள் | -- 88 |

| | | |
|---|---|---|
| விற்கப்படாத மனையின் பரப்பு | -- | 134752.00 சதுர அடி |
| விற்கப்படாத மனை எண்கள் | -- | 6, 6A(8 முதல் 49 வரை) மற்றும் (51 முதல் 81 வரை) |
| விற்கப்பட்ட மனையின் பரப்பு | -- | 43876.00 சதுர அடி. |
| விற்கப்பட்ட மனை எண்கள் | -- | 1 முதல் 5 வரை, 7 மற்றும் 50 |

<u>வசூல் செய்யப்பட வேண்டிய கட்டணங்கள்</u>

1. பார்வை 4-ல் கண்ட மனுதாரரின் கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனையில் Scrutiny fees மனைப்பிரிவில் உள்ள விற்கப்படாத மனைகளுக்கு (1 மனைக்கு) ரூ.500/- வீதம் ரூ.49;500/- பரிசீலனை கட்டணம் (Scrutiny fees) Online மூலம் செலுத்தப்பட்டுள்ளது.

2. வரன் முறைப்படுத்துதல் கட்டணம் மனைகளின் பரப்பில் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.30/- வீதம் கீழ்காணும் அரசு கணக்கு தலைப்பில் SBI, திருக்கழுக்குன்றம் கிளையில் மட்டுமே செலுத்தி அதன் அசல் செலுத்துச் சீட்டினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

   **<u>Regularisation Charges Head of Account</u>**

   "0217 Urban Development 60 Urban Development Scheme – 800 Other Receipts -
   AT Receipts Under Regularisation Charges of unapproved layouts and plots - DTCP".
   (DPC : 0217 - 60 - 800 – AT 0007)

3. வளர்ச்சிக் கட்டணம் ஒவ்வொரு மனைக்கும் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.25/- வீதம் உள்ளாட்சியின் தனிக்கணக்கில் பெற்ற பின்னரே இம்மனைப்பிரிவில் அமையும் ஒவ்வொரு மனைக்கும் தனித்தனியாக உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4. அரசாணை (நிலை) எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர் ஏற வளர்ச்சி துறை நாள்.13.10.2017-ல் விதி எணு. 7 (g) (ii)-ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

5. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (ம) பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்மந்தப்பட்ட மனைகளுக்கு அனுமதியளிக்கப்பட வேண்டும்.

12

ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு மேல் நடவடிக்கைகாக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

12.2.18

உறுப்பினர் செயலர் (பொ)
மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம்,
மாமல்லபுரம்

12/2/18

**இணைப்பு :**
மனைப்பிரிவு வரைபடம் - 2

**பெறுநர்,**

1. **தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)**
   **புதுப்பட்டினம ஊராட்சி மற்றும் தையூர் கிராமம்,**
   திருக்கழுக்குன்றம் .ஊராட்சி ஒன்றியம்,
   காஞ்சிபுரம் மாவட்டம்.

**நகல்:**

2. **Mr.BILAL HUSSAIN**
   Old No.355, New No. 349,
   ECR Road, Thirukazhukundram Taluk,
   Kancheepuram District.

3. **உறுப்பினர் செயலர் (பொ),**
   மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம்,
   மாமல்லபுரம், மனைப்பிரிவு வரைபடம் சமர்ப்பிக்கப்படுகிறது.

4. **நகர் ஊரமைப்பு ஆணையர்,**
   807, அண்ணா சாலை, சென்னை - 2
   அவர்களுக்கு மனைப்பிரிவு வரைபடம், பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

5. **கணக்கு பிரிவு** - மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழும அலுவலகம்.

6. **உதவி இயக்குநர்** (நில அளவை)
   மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,
   காஞ்சிபுரம் மாவட்டம்.
   மனைப்பிரிவு வரைபடம் - 1

7. **வட்டாட்சியர்**
   திருக்கழுக்குன்றம் வட்டம்,
   திருக்கழுக்குன்றம்.
   மனைப்பிரிவு வரைபடம் - 1

(6, 7): மனைப்பிரிவு சாலை மற்றும் திறந்தவெளி (பூங்காக்கள்) ஒதுக்கீடு பகுதியினை உட்பிரிவு செய்து உள்ளாட்சி பெயரில் மாற்றம் செய்ய வேண்டும்.

8. **சார்-பதிவாளர்**
   சார்பதிவாளர் அலுவலகம்
   திருக்கழுக்குன்றம்.
   மனைப்பிரிவு வரைபடம் - 1